விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 179 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 02 திங்கட்கிழமை (16.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல்
சுத்தமான தேன்

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு போதியிடப்படுகிறது.
(C-3206)
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

# இஸ்ரேல் - ஈரான் மாறி மாறி குண்டு வீச்சு

## அமைதியை ஏற்படுத்துவேன் - ட்ரம்ப்



(வோசிங்டன்)

இஸ்ரேல், ஈரான் மோதல் மூன்றாவது நாளாக நீடித்து வருகின்றது. இந்நிலையில் இஸ்ரேலின் டெல் அவிவ், ஜெருசலேம், ஹைஃபா போன்ற நகரங்கள் மீது ஏராளமான ஏவுகணைகளை வீசி ஈரான் 16ஆம் பக்கம் பார்க்க

### சுமார் 35 ஆண்டுகளின் பின்

# பலாலி இராஜராஜேஸ்வரி ஆலயத்தை தினசரி வழிபட அனுமதி



(பலாலி)

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பலாலி கிழக்கு இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நித்திய வழிபாட்டுக்கு இராணுவத்தினர் அனுமதியளித்துள்ளனர்.

கடுமையான கட் 15ஆம் பக்கம் பார்க்க

# பண்டிதர் பரந்தாமனின் இறுதிக்கிரியை இன்று



(புலோலி)

தாயகத்தின் முதுபெரும் கலை இலக்கியப் படைப்பாளி பண்டிதர் வீ.பரந்தாமன் (வயது-83) நேற்று முன்தினம் பருத்தித்துறை புலோலியில் காலமானார்.

15ஆம் பக்கம் பார்க்க

# ஊழல் விசாரணையைத் தடுக்க இனவாதம் தூண்டப்படுகிறது

## தமிழ் மக்கள் எம்மை நம்புகின்றனர் ஜேர்மனியில் ஜனாதிபதி அநுர



(பேர்லின்)

தோல்வி அடைந்த அரசியல் குழுக்கள், ஊழல் மோசடி விசாரணைகளை முறியடிப்பதற்காக இனவாதத்தைத் தூண்டுகின்றன என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# குடத்தனையில் வாள்வெட்டு; நால்வர் படுகாயம்

(குடத்தனை)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த நால்வரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 15ஆம் பக்கம் பார்க்க

# ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் அரச வாக்குறுதி கிடப்பில்

## கர்தினால் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஈஸ்ர் தாக்குதல்களின் உண்மையான குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்துவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியதற்காக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், தற்போதைய அரசாங்கத்தைக் குறை கூறியுள்ளார். மேலும்,

சட்டமா அதிபர் திணைக்கள 15ஆம் பக்கம் பார்க்க

# பலாலி கிழக்குப் பகுதியில் விரைவில் மீள்குடியேற்றம்

## இளங்குமரன் எம்.பி உறுதி



(பலாலி)

கடந்த 35 வருடங்களாக பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் உள்ள பலாலி கிழக்குப் பகுதி விரைவில் விடுவிக்கப்பட்டு 15ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதியின் ஜேர்மன் விஜயம் சந்திப்புக்களை வெளிப்படுத்த வேண்டும்

## ஐ.ம.சக்தி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரவின் ஜேர்மன் விஜயத்தின் போது புலம்பெயர் இலங்கையர்களுடன் ஏதேனும் இணக்கப்பாடு எட்டப்பட்டதா என நாட்டுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என பிரதான எதிர்க் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் பாராளுமன்ற உறுப் 02ஆம் பக்கம் பார்க்க

# நான்கு சபைகளுக்கு ஆட்சி வவுனியாவில் உடன்பாடு

(வவுனியா)

வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் கட்சிகள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கு இடையில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கட்சிகளின் முக்கியஸ்தர்களிற்கிடையில் தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் நேற்று (15) காலை இடம் பெற்றது. 02ஆம் பக்கம் பார்க்க

### முன்னாள் அமைச்சர்

# தயா கமகேவின் மூன்று நிறுவனங்கள் ஏலத்தில்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் தயா கமகேவுக்கு சொந்தமானதாகக் கூறப்படும் மூன்று நிறுவனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யுமாறு கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்பிரகாரம் ஜூலை மாதம் 2ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இந்த ஏலம் நடைபெறும் என கொழும்பு வணிக மேல் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பல்கலைக்கழகங்களின் பட்டங்களின் தரம் தொடர்பில் கல்வி அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் பட்டங்களின் தரம் குறித்து கல்வி அமைச்சினால் முறையான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சு வளாகத்தில் நேற்று முன்தினம் ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைந்த உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வியியல் பட்டங்களின் தரம் குறித்து கல்வி அமைச்சு முறையான ஆய்வு ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த நிறுவனங்களில் கல்வியியல் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் தகுதிகள், குறிப்பாக இலங்கை ஆசிரியர் சேவையில் நியமனம் பெறுவதற்கான தகுதி மற்றும் பொருத்தப்பாடு தொடர்பாக சிக்கல்கள் எழுந்துள்ளன.

சமீபத்திய ஆசிரியர் நியமனங்கள் முன்னைய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சேவை விதிமுறைகளுக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டதாகத் தெளிவுபடுத்தினார்.

எனினும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் கல்வியியல் பட்டங்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மை தற்போது கல்வி அமைச்சின் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.


எதிர்காலத்தில் ஆசிரியர் சேவைக்கான நியமனங்கள் இந்தத் தர ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படும் என்றார். (ந-4,7)

## மண்டைதீவு முகப்புவயலில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்புவயல் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று(16) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றம் இடம்பெறுவதுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(ந)



கரவெட்டி குழந்தை ஜேசு முன்பள்ளியின் 2025 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்ற இல்லம் மற்றும் மாணவருக்கான வெற்றிக் கேடயம் மற்றும் பரிசில்களை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி மகேந்திரன் வாசுதேவன் வழங்கி வைப்பதையும் வெற்றிக் கேடயத்தை முன்பள்ளி அதிபர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## நான்கு...

கலந்துரையாடலில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக தேசிய கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகளிற்கிடையில் பொது நோக்கம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் இணைந்து ஒரு நிர்வாகத்தை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு மாநகர முதல்வர் பதவியும், பிரதி முதல்வர் பதவி ஜனநாயக தேசிய கூட்டணிக்கு முதல் இரண்டு வருடங்களுக்கும், தமிழரசுக் கட்சிக்கு அடுத்த இரு வருடங்களுக்கும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் தவிசாளர் பதவி தமிழரசுக் கட்சிக்கும், உபதவிசாளர் பதவி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உபதவிசாளர் பதவியை இரண்டு வருடங்களுக்கு பகிர்வது தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும், ஐக்கிய மக்கள் சக்தியும் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழரசுக் கட்சிக்கு தவிசாளர் பதவியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு உபதவிசாளர் பதவியும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு தவிசாளர் பதவியும், தமிழரசுக் கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் என உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான நிசாட் பதியுதீன், முத்து முகமது, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், ஜனநாயக தேசிய கூட்டணி சார்பில் சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, ஜனநாயக போராளிகள் கட்சியின் க.துளசி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ந-4,7,250)

## ஜனாதிபதி...

பினர் அஜித் பி. பெரேரா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களிடம் கருத்துரைக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜேர்மனுக்கு விஜயம் செய்ததோ அல்லது அங்குள்ள புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்ததோ எவ் விதத்திலும் தவறென நாம் குறிப்பிடவில்லை.

ஆனால் அங்கு அவர்களுடன் என்ன கலந்துரையாடப்பட்டது என்பது தொடர்பிலும் ஏதேனும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தால் அது எவ் வகையானது என்பதையும் நாட்டுக்கு வெளிப்படுத்தியேயாக வேண்டும் என்றார். (ந-4,7)

## ஊழல்...

ஜேர்மனிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர அங்கு வசிக்கும் இலங்கையர்களை சந்தித்துக் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் கட்டமைப்பை சுத்தப்படுத்துவதற்கான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இதற்கான சவாலை நாம் ஏற்றுள்ளோம். குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக் குழு ஆகியன விசாரணைகளை மேற்கொண்டு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இதனடிப்படையில் மேல் நீதிமன்றத்துக்கு குற்றப்பத்திரிகையை சமர்ப்பித்து வழக்குத் தாக்கல் செய்யப்படும். அதன்பின்னர் வழக்கை விசாரணைக்கு உட்படுத்தி தண்டனையை வழங்கும் அதிகாரம் மேல் நீதிமன்றத்துக்கு உரியது.

தற்போது கெஹலிய ரம்புக்வெல, மேர்வின் டி சில்வா ஆகியோரது விசாரணைகள் நிறைவுக்கு வருகின்றது. நாமல் ராஜபக்ஷவின் கிரிஷ் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி ஆகியோருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதன் பின்னரான செயற்பாடு மேல் நீதிமன்றத்திடமே உள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைப்பார்கள். நீதிமன்றம் உரிய தீர்மானத்தை மேற்கொள்ளும்.

ஆகவே இந்நாட்டு மக்கள் எனக்கு வாக்களித்ததன் மூலம் எதிர்பார்க்கும் வேலைத்திட்டத்தை நான் நிறைவேற்றி வருவதாக நினைக்கிறேன்.


மோசடி மற்றும் ஊழலுக்கு எதிரான சட்டத்தை நடை முறைப்படுத்தும் போது சில சக்திகள் இனவாதத்தைத் தூண்டுவதனூடாகத் தம்மைப் பாதுகாக்க முயற்சிக்கின்றன.

இலங்கையில் முதற்தடவையாக வடக்கு மக்கள் புதிய ஆட்சியில் நம்பிக்கை வைத்துள்ளனர். அது முக்கியமான திருப்புமுனை. ஆனால் தோல்வியடைந்த அரசியல் முகங்கள் பழைய இனவாத அரசியலை தூண்டுகின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தரை சந்திப்பதற்காகவே நான் ஜேர்மனிக்கு செல்வதாக சிலர் கூறுவதை அறிந்தேன். இது தோல்வியடைந்த இனவாத அரசியல். இதற்கு நாம் இடமளிக்க முடியாது. இந்த நிலைமை தொடர்ந்தால் புதிய சட்டங்களை இயற்றியேனும் இனவாத அரசியலை இல்லாது ஒழிப்போம்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும் அதனைத் தக்கவைப்பதற்கும் இனவாதத்தை பயன்படுத்த யாரும் முனையக் கூடாது என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அங்கு மேலும் தெரிவித்தார். (ந-4,7)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி பொன்முடி ராகவன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமன்**

அவர்கள் 14.06.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்



### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்
### வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களினால் மேற்படி கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறியத் தருவதுடன் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(4559)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கட்டியெழுப்ப சகலரும் முன்வாருங்கள்

## ஜேர்மனியிலுள்ள இலங்கை பிரஜைகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

(பேர்லின்)........................

**வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் நிலையான ஆரம்பத்தை எடுத்துள்ளது. எனவே இலங்கையை வளமான நாடாக மாற்றுவதற்கு எந்தவித பேதங்களும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரி வித்தார்.**

ஜேர்மனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று முன்தினம் சனிக்கிழமை அங்கு வசிக்கும் இலங்கையர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு உரையாற்றினார்.

ஜேர்மனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று முன்தினம் ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் ஏற்பாடு செய்த வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதனைத்தொடர்ந்து ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பில் ஜேர்ம னியில் வசிக்கும் இலங்கை வர்த்த கர்கள் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பலர் கலந்து கொண்டிருந்ததுடன் அவர்கள் ஜனாதி பதியை உற்சாகத்துடன் வரவேற்றனர்.

வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜேர்ம னிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குண ரத்ன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இதன்போது அங்கு உரையாற்றிய ஜனாதிபதி,

இலங்கையை வளமான நாடாக மாற்றுவதற்கு எந்தவித பேதங்களும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும் நமது பொருளாதாரத்திற்கு வெளிநாடுகளில் வசிக்கும் இலங் கையர்கள் வழங்கும் பங்களிப்பைப் பாராட்டுவதோடு வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நமது அரசாங்கம் நிலையான ஆரம் பத்தை எடுத்துள்ளது என்றும் ஜனா திபதி அங்கு மேலும் குறிப்பிட்டார். (நி-3)

# மோதல் தீவிரமானால் எரிபொருள்விலை உச்சம் தொடும்

## எச்சரிக்கும் வல்லுநர்கள்

(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர்ப் பதற்றம் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளன.

அதன்படி, WTI கச்சா எண்ணெயின் பீப்பாய் ஒன்றின் விலை 72.98 அமெ ரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதுடன் இது 0.18 சதவீத அதிகரிப்பாகும்.

பிரெண்ட் கச்சா எண்ணெயின் பீப்பாய் ஒன்றின் விலை 74.23 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதுடன் இது 2.84 சதவீத அதிகரிப்பாகும்.

ஹார்முஸ் நீரிணை போன்ற முக்கிய எண் ணெய் கடத்தும் பாதை களில் பதற்றம் உரு வானால், அது உலகம் முழுவதும் எண்ணெய் விலையை பாதிக்கும்.

மோதல் மேலும் தீவிரமாகுமானால், எண்ணெய் விலை 80 டொலர்களுக்கும் மேல் செல்லும் வாய்ப்பு இருக்கிறது என வல்லு நர்கள் எச்சரிக் கின்றனர். (நி-8)

# 378 உப தபாலதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

இலங்கை தபால் திணைக்களத் தின் மனித வளத்தை மேம்படுத் தும் நடவடிக்கையாக, 378 தபால் நிலைய தற்காலிக உப அதிபர்களு க்கு நிரந்தர நியமனங்களை வழங்க அரசு தீர்மானித்துள் ளது.

அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தீர்மானத்தை அறிவித்தார்.

நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த 378 தபால் நிலைய தற்காலிக உப அதிபர்க ளுக்கு நிரந்தர ஓய்வூதிய உரிமை யுடன் கூடிய நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவை யின் சிறப்பு அனுமதியும் பெறப்பட் டுள்ளதாக அமைச்சர் தெரி வித்தார். (நி-8)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கழகங்களுக்கிடையிலான தடகள போட்டி
## சென்.தோமஸ் கழகத்திற்கு தங்கப்பதக்கம்




பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் சென் தோமஸ் விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ். விகாஷன் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சஞ்சைய் வெள்ளிப் பதக்கத்தையும், சென் தோமஸ் விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த யோ.அமல ரொக்சன் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

(நி-3-90)

## வேகநடைப் போட்டியில்
## யாழ்.யுவதி தேசிய சாதனை



யாழ்ப்பாணம் - பொன்னாலை பகுதியைச் சேர்ந்த தமிழரசி ஜீவேஸ்வரன் என்ற யுவதி தேசிய ரீதியாக நடைபெற்ற 10 ஆயிரம் மீற்றர் வேகநடைப் போட்டியில் பங்குபற்றி, முப்படை வீரர்கள் மற்றும் ஏனைய போட்டியாளர்களுடன் போட்டியிட்டு மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை தன் வசப்படுத்தியுள்ளார்.

குறித்த யுவதி கருத்து தெரிவிக்கையில்,

நான் இந்த ஆண்டு தேசிய ரீதியாக 10 ஆயிரம் மீற்றர்கள் வேகநடைப் போட்டியில் மூன்றாமிடம் வந்து வெண்கலப்பதக்கத்தை பெற்றுள்ளேன். இதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டு பாடசாலை மட்ட ரீதியாக 5 ஆயிரம் மீற்றர்கள் வேகநடைப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன்.

அதைவிட மாவட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டேன்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் முப்படை வீரர்களுடன் போட்டியிட்டே இந்த மூன்றாவது இடத்தை பெற்றுள்ளேன்.

இந் நிலையில் எனது பயிற்றுவிப்பாளர்களுக்கும் இப் போட்டியில் பங்கு பற்றுவதற்குத் தேவையான நிதி அனுசரணை வழங்கியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

(நி-3-104)

## ஆண்டர்சன்-டெண்டுல்கர் கிண்ண
## டெஸ்ட் தொடர் இரத்து




இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான ஆண்டர்சன் -டெண்டுல்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் ஆரம்ப நிகழ்வு இரத்து செய்யப்பட்டுள்ளது.

அஹமதாபாத் விமான விபத்து இந்தியா முழுவதும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் குறித்த நிகழ்வை ஒத்திவைக்க அல்லது முற்றிலுமாக இரத்து செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னதாக, இந்த நிகழ்வை நேற்றைய தினம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஆகியவை இணைந்து லோர்ட்ஸில் நடைபெறவிருந்த இந்த நிகழ்வை இரத்து செய்ய முடிவுசெய்துள்ளன. (நி-3)

## 27 வருட காத்திருப்பு நிறைவு
## சரித்திரம் படைத்த தென்னாபிரிக்கா




சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2023/2025 ஆம் ஆண்டுக்கான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா அணி கிண்ணத்தை வென்றுள்ளது.

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்று வந்த இந்த போட்டியின் முதல் இன்னிங்ஸில், அவுஸ்திரேலியா அணி ஆதிக்கம் செலுத்தியது.

இதன்படி அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 212 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 138 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

இதனையடுத்து இரண்டாம் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா அணி 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள, தென்னாபிரிக்க அணிக்கு 282 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்தநிலையில் வெற்றி இலக்கை நோக்கி தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை கடந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணியின் சார்பில் எய்டன் மார்க்ரம் (Aiden Markram) 136 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

இதற்கமைய 2023/25 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்பை தென்னாபிரிக்க அணி முதற்தடவையாக சுவீகரித்துக் கொண்டது.

அத்துடன், 1998 ஆம் ஆண்டு சம்பியன்ஷிப் போட்டியில் பெற்ற வெற்றிக்கு பின்னர் முதல் தடவையாக சர்வதேச கிண்ணம் ஒன்றை தென்னாபிரிக்க அணி சுவீகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எங்களுடன் இணைந்து பயணியுங்கள்'

# தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடும் ஆனந்தசங்கரி



(தருமபுரம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து பயணிக்க தமிழரசுக் கட்சி முன்வர வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல்லாண்டு கால பகைமையை மறந்து ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா இணைந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினர். தமிழ் மக்களின் நலன் கருதி எதிரும் புதிருமாக இருந்த தலைவர்கள் காலத்தின் தேவையை உணர்ந்து ஒன்றாகியே இக்கட்சியை உருவாக்கினர்.

அந்த பெரியார்களின் மறைவுக்குப் பின்னர் அக்கட்சியின் செயலாளர் நாயகமாக நான் இருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்களின் ஆசீர்வாதம் எனக்கு இருந்தது. தந்தை செல்வா தனது மரணத்துக்கு முன்னர் என்னுடன் பயணித்தார்.

அவருக்கு விழுந்த மாலையிலிருந்து பூக்களை பிடுங்கி எனது தலையில் எறிந்து ஆசீர்வதித்ததை நான் நன்கு உணருகின்றேன்.

அந்தப் பயணத்தின் பின்னர் ஒரு சில நாட்களில் அவர் உயிர் பிரிந்தார். அவரது ஆசீர்வாதம் மட்டுமல்ல. ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்களின் ஆசீர்வாதமும் எனக்கு கிடைத்தது.

அந்த பெரியார்களால் உருவாக்கப்பட்ட கட்சியில் இணைந்து ஒற்றுமையாக செயற்படுமாறே நான் அழைக்கின்றேன். மக்களின் இன்றைய அரசியல் நிலைமையில் ஒருமைப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது.

தமிழரசுக் கட்சியினர் மீண்டும் எம்முடன் இணைந்து பயணிக்க வேண்டும். சுமந்திரனுக்கு இந்த அழைப்பை நான் விடுக்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியில் மீண்டும் இணைவதன் மூலம் நன்மையான விடயங்களை பெற முடியும்.

இந்திய அரசியலமைப்பு முறையிலான தீர்வையே நான் வலியுறுத்தி வருகின்றேன். சிங்கள, இஸ்லாமிய மக்களும் அதனை வரவேற்றனர்.

அந்தத் தீர்வுத் திட்டத்திற்காக நாம் தொடர்ந்தும் முயற்சித்து வெற்றி பெற முடியும். அதற்கான காலம் மீண்டும் உருவாகியுள்ளது. அதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இன்று பதவிக்காக அலைகின்றனர். பதவிகளுக்காக கூட்டுச் சேருகின்றனர். நான் பதவிக்கு ஆசைப்பட்டதில்லை. பதவிக்காக அலைந்தது இல்லை. அவ்வாறு பதவிக்கு அலைந்திருந்தால் இன்று 30 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்தும் இருந்திருப்பேன்.

இன்றைய அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டு அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (8-316)

# சமாதானத்தை கட்டியெழுப்பும் மத நல்லிணக்க பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினரின் நிலையான சமாதானத்திற்காக மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இளைஞர்களின் சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை நேற்று ஞாயிற்றுக்கிழமை தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

சந்நிதியான் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான பாதயாத்திரை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு சென்று அங்கு விசேட வழிபாடுகள், சந்நிதியான் ஆச்சிரம உபசரணைகள், உதவிகளுடன் கருத்துரைகள் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து பாத யாத்திரை ஆரம்பமானது. (நி-33)



# இராசிபலன்

16.06.2025
ஆனி 02, திங்கட்கிழமை
பஞ்சமி பிற்பகல் 2.02 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 11.52 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
இராகுகாலம் 7.23-8.53 மணிவரை

சந்திராஷ்டமம்-
புனர்பூசம், பூசம்

வளவன்



மேஷம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாடு இன்பம் தரும்.



கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.



துலாம்

கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வளர்ச்சி கூடும், பிறர் உதவியுண்டு.



மகரம்

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ் கூடும், பணவரவு திருப்தி தரும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு



ரிஷபம்

சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.



சிம்மம்

நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



விருச்சிகம்

குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.



கும்பம்

நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.



மிதுனம்

ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.



கன்னி

மறைமுகப் போட்டிகள் மாறும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.



தனுசு

பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



மீனம்

உடனிருந்தவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எப்படி நடக்கு மோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**அமைதியான உள்ளமே அமைதிக் கடலின் எல்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணிகளை அபகரித்தால் போராட்டம் வெடிக்கும்!

## செல்வம்.எம்.பி.சூளுரை



(மன்னார்)

**கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதை ஒரு போதும் நாம் அனுமதிக்கப் போவதில்லை என ரெலோ தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்த தன் பின்னர் முப்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதாக தெரிவித்து இருந்தார். இருந்த போதிலும் பல இடங்களில் அது நடைபெறவில்லை.

இதேவேளை மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள தனியார் காணிகள் குறித்து நாங்கள் பாராளுமன்றத்தில் பேசி இருந்தோம்.

ஜனாதிபதிக்கும் இது தொடர்பாக கடிதங்கள் அனுப்பி இருந்தோம். ஆனால் தற்போது இந்த கடற்படை முகாம் அமைந்திருக்கும் காணிகளை வருகின்ற 20 ஆம் திகதி அளவீடு செய்யப் போவதாக துண்டு பிரசுரம் ஒட்டப்பட்டு இருக்கிறது.

எனவே நாங்கள் அதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. மக்கள் இதற்கு நிச்சயம் போராடுவார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு இது சம்பந்தமாக நாங்கள் ஜனாதிபதிக்கும் தெரிவிக்க இருக்கிறோம்.

அதேபோன்று அபிவிருத்திக் குழுத் தலைவருக்கும் நாங்கள் இது சம்பந்தமான முறைப்பாடு செய்ய இருக்கிறோம். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்தோடு பள்ளிமுனை மக்களின் காணிகளை அவர்களிடமே பகிர்ந்தளிக்க வேண்டும்.

கடற்படை அதை அபகரிக்கும் செயற்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன் மக்கள் போராட்டம் வெடிக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டாம் என்பது எங்களுடைய கோரிக்கையாக உள்ளது.

எனவே ஜனாதிபதியிடம் இந்த செயற்பாட்டை நிறுத்துமாறு வலியுறுத்தி பாராளுமன்றத்தில் நாங்கள் பேச இருக்கிறோம் என்றார். (8-285)

## ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி உறுப்பினர் சத்தியப்பிரமாணம்

(வவுனியா)


ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சியின் வன்னி மாவட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் சத்திய பிரமான நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் வவுனியா குருமன்காடு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி சார்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 26 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இதன்போது கலந்து கொண்டு சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இதில், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)

## யோகா போட்டி



(நெளுக்குளம்)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் யோகாப்போட்டி நேற்று இடம் பெற்றது.

யோகா, கராத்தே, சிலம்பம், வர்மக்கலை துறைகளினுடைய மாஸ்டர் ஜெயம் ஜெகனின் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மணியளவில் குறித்த போட்டி நிகழ்வானது ஆரம்பமாகி இடம்பெற்றிருந்தது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று நிலைகளை பெறுவோருக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும், பங்குபற்றியோர், வெற்றியீட்டியோருக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் சர்வதேச யோகா தினமான ஜூன் மாதம் 21 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு பொன் விழா மேடையில் வைத்து வழங்கி வைக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியபல்லவன் , முல்லை கோட்டக்கல்வி அதிகாரி திருக்குமரன், சர்வதேச சாதனையாளர் அகில திருநாயகி, ஓய்வுநிலை பிரதிக்கல்வி பணிப்பாளர் பேரின்பநாயகம், எண்ணூறுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)

## குறைந்த கட்டணத்தில் பயணிக்கலாம்



(வவுனியா)

வவுனியாவில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பூட்டும் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். ரவீந்திரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தில் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தாமையினால் பாவனையாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதனை கருத்தில் கொண்டு வவுனியாவில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பூட்டும் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டது.

முதலாவது கிலோமீற்றருக்கு 130 ரூபாயும் இரண்டாவது மீற்றரில் இருந்து கிலோ மீற்றருக்கு 100 ரூபாயும் அறவிடுவதற்கான திட்டமும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. (8-250)

## விவசாயக் குழுக்கூட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின், மாவட்ட விவசாய குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது முல்லைத்தீவு மாவட்ட விவசாய பிரிவின் செயற்பாடுகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகள், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்பாடுகள், விவசாயக் காப்புறுதி சார் செயற்பாடுகள், மாகாண விவசாய திணைக்களத்தின் செயற்பாடுகள், கமநல அபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகள், விதை ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்புச் செலுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும், மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைத்தல், மேய்ச்சல் நிலம் உள்ளிட்ட ஏனைய பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெயகாந் (காணி), மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், மாவட்ட விவசாய பிரிவின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-281)




தாய் நாட்டின் சமாதானம் கருதி உயிர் நீத்த இலங்கையர்களை நினைவு கூர்ந்தும்,உலக இரத்த தான தினத்தை முன்னிட்டும் இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது. (படம்-ஜோசப்நயன்)



கிளிநொச்சி மகாதேவசுவாமிகள் சிறுவர் இல்லத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (படம்-தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலி கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.
(படங்கள்-மகாலிங்கம்)

# செயற்கை நுண்ணறிவு விரகியல் களத்தில் உலகம்



லிபியா, எகிப்து, ஈராக் வரிசையில் ஈரான் ஆகிய நாடுகளில் இராணுவச் சர்வாதிகார அழிப்பு ஐக்கிய அமெரிக்காவினை மீண்டும் உலகின் முதன்மை வல்லரசாக உறுதிப்படுத்தி உள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் நட்சத்திரப் போர்முனையில் இன்றைய மனித குலம் தவிக்கின்றது. இஃது புவிசார் அரசியலுக்கு அப்பால் விண்சார் அரசியலாக பரிணமித்து உள்ளது. இன்றைய சூழலில் பூகோள நிலை அதிகம் செல்வாக்குச் செலுத்தாது. நாடு என்ற கட்டமைப்பு அதிகம் செல்வாக்குச் செலுத்தாது.

பொருளாதார தாழ்நிலை அடையும் போது ஸ்திரமான அரசுகள் அமையாது..

உலகின் முதன்மை வல்லரசாகப் போட்டியிட்ட ரஷ்யா, சீனா என்பன தற்போதைய இஸ்ரேலின் தாக்குதலால் நீண்ட காலத்திற்குப் பொருளாதாரப் பின்னடைவை அடைகின்றன.

இன்றைய சூழலில் இந்திய அரசு மிகவும் சாதுரியமாகச் செயற்பட வேண்டும். ஈரானின் இராணுவத் தளபதிகளும் அணுசக்தி விஞ்ஞானிகளும் மிகவும் துல்லியமாக இலக்கு வைக்கப்படுவதற்கு அவர்களது விஞ்ஞான ஆய்வுத் தகவல் தொடர்பாடல்களே காரணமாக அமைந்துள்ளது. இது உலகின் அணுசக்தி பயன்பாடுடைய நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கை ஆகும்.

அதாவது அணு ஆயுதங்களை பிரயோகிக்க எத்தனிக்கும் நாடுகளில் அந்நாடுகளின் அணுசக்தி நிலையங்களை மட்டுமல்ல அவற்றினை இயக்கும் விஞ்ஞானிகளும் இலக்கு வைக்கப்படுவர். அந்த வகையில் இந்தியாவின் மீது மஞ்சள் நிலையும் வடகொரியா மீது சிவப்பு நிலையும் ஆபத்து அடையாளங்கள் உள்ளது.

அண்மைய மொசாட்டின் செயற்றிறன் உலகின் மனிதர்களின் செயற்பாட்டினை செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் கட்டுப்படுத்தும் நவீன போர்முனையினை எமக்குக் காட்டி நிற்கின்றது.

மருத்துவர்-சி.யமுனாநந்தா

# இஸ்ரேல்-ஈரானிலுள்ள இலங்கையர்கள் தூதரகத்துடன் தொடர்பில் இருக்கவும்

## 24 மணிநேர அவசர தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிப்பு

(கொழும்பு)

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான இராணுவ நிலைமையை இலங்கை உன்னிப்பாக அவதானித்து வருவதாக வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், அந்தப் பகுதிகளில் வசிக்கும் அல்லது அங்கு வருகை தரும் அனைத்து இலங்கையர்களும் அருகிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறு கட்டாயமாக அறிவுறுத்தப்படுவதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

அதன்படி, இந்த காலகட்டத்தில் இலங்கையர்களுக்கு உதவுவதற்காக மத்திய கிழக்கில் உள்ள அனைத்து இலங்கை தூதரகங்களும் 24 மணி நேர அவசர தொலைபேசி இலக்கங்களை பயன்பாட்டில் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையர்கள் அவசர தொடர்புகளுக்கு பின்வரும் தொலைபேசி எண்களை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம் என்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

இஸ்ரேல்- +94 71844 7305 , +94 71 683 3513 , +94 71 974 2095, டெஹ்ரான்- +98 939 205 5161. (நி)

# பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்தார் பிரான்ஸ் தூதுவர்



(கொழும்பு)

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமிலம் பேர்ட்க்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதமர், பிரெஞ்சு தூதுவர் ரெமிலம்பேர்ட்டை வரவேற்றதுடன், இலங்கைக்கும் பிரான்சுக்கும் இடையிலான நீண்ட கால நட்பு மற்றும் ஒத்துழைப்பு குறித்து பாராட்டு தெரிவித்தார்.

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் குறித்து இந்த சந்திப்பின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இராஜதந்திர உறவுகள் துறையில் உள்ள அதிகாரிகளுக்கான பிரெஞ்சு மொழிப் பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் சிவில் சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்தல் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 150 | 300 | 200 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 650 | 800 |
| தக்காளி | 400 | 400 | 450 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 220 | 250 |
| கோவா | 400 | 550 | 600 | 420 | 600 |
| கரட் | 800 | 750 | 800 | 650 | 800 |
| பூசணி | 120 | 180 | 150 | 130 | 200 |
| புடோல் | 180 | 160 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 650 | 500 | 700 | 700 | 1000 |
| வெண்டக்காய் | 100 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 350 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 320 | 600 |
| பீற்றூட் | 600 | 500 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 850 | 700 | 700 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 1300 | 2000 |
| போஞ்சி | 600 | 600 | 700 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 120 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 50-100 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 350 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-170 | 150-180 |
| இராசவள்ளி | 600 | 550 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 600 | 650 | 800 |
| முள்ளங்கி | 250 | 150 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியாவில் மீண்டும் உலங்குவானூர்தி விபத்து

## பயணித்த அனைவரும் பலி



(டில்லி)

இந்தியாவின் உத்தர காண்ட் மாநிலம் - கவுரி குந்த் அருகே இடம்பெற்ற உலங்குவானூர்தி விபத் தில் ஏழு பேர் உயிரிழந்துள் ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

நேற்றுக் காலை டேரா டூனில் இருந்து கேதார்நாத் நோக்கி பயணித்த உலங்கு வானூர்தியே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதில் ஏழு பேர் பய ணித்திருந்த நிலையில் ஐவர் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட தகவல்கள் வெளி யாகியிருந்தன.

எனினும் தற்போது அதில் பயணித்த அனை வரும் உயிரிழந்திருக்க லாம் என்று எதிர்வு கூறப்பட் டுள்ளது.

இந்த உலங்குவானூர்தி காணாமல் போனதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அறிவித்திருந்த நிலையில், தற்போது உலங்குவானூர்தி விபத் திற்குள்ளானதாக உத்தர காண்ட் சட்டம் மற்றும் ஒழுங்கு கூடுதல் இயக்குநர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த உலங்கு வானூர் தியில், ஒரு விமானி உள் ளிட்ட ஐந்து பெரியவர்கள் மற்றும் ஒரு குழந்தை இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விமான விபத் திற்கு சீரற்ற காலநிலை ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை, கடந்த 12ஆம் திகதி குஜராத் தின் - அகமதாபாத்தில் இடம்பெற்ற ஏர் இந்தியா விமான விபத்து உலக விமானப் போக்குவரத்துத் துறையை உலுக்கியிருந் தது.

இதில், விமானிகள் மற் றும் விமான ஊழியர்கள் உள்ளிட்ட 242 பேர் பயணித்திருந்த நிலை யில், ஒருவர் மாத்திரம் உயிர் பிழைத்திருந்ததுடன் ஏனைய அனைவரும் உயி ரிழந்திருந்தனர்.

இந்த விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து நொறுங் கியதுடன், விமானத்தில் பயணித்தவர்கள் மற்றும் விபத்து நடந்த இடத்தில் இருந்தவர்கள் என்று மொத்தம் இதுவரை 274 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில், மீண்டும் இந்தியாவில் இடம்பெற்ற இந்த உலங்கு வானூர்தி விபத்து ஒருவித அச்ச நிலையை தோற்று வித்துள்ளது. (நி-8)



# மூண்டது இஸ்ரே...

# ...மூளுமா உ...

(டெஹ்ரான்)

**நீங்கள் உலகப் போருக்குத் தயாரா? என பதிவிடப்பட்டுள்ள அதிர்ச்சிக் காணொளி ஒன்றை ஈரான் தற்போது வெளியிட்டுள்ளது.**

ஈரான் - இஸ்ரேல் போர் பதற்றம் உச்சமடைந்து ள்ள நிலையில் ஈரான் தற்போது அதிர்ச்சி காணொளி ஒன்றை வெளியிட்டுள் ளது.

ஈரானில் இராணுவ அதி காரிகள் மற்றும் அணு விஞ்ஞானிகள் உட்பட 78 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் முந்தைய இஸ் ரேலிய வான்வழித் தாக்கு தல்களுக்கு பதிலடி கொடுக் கும் வகையில், கடந்த வெள் ளிக்கிழமை இரவு இஸ் ரேல் மீது ஈரான் தொடர்ச்சி யான பாலிஸ்டிக் ஏவுக ணைத் தாக்குதல்களை நடத்தியது.

ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் மீது வெடிப் புகள் வானத்தை ஒளிரச் செய்தன, இது பரவலான பீதியையும் சேதத்தையும் ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து சனிக்கிழமை அதிகாலை இரண்டாவது அலை தாக்கு தல்கள் ஜெருசலேம் முழுவ தும் வான்வழித் தாக்கு தலை மேற்கொண்டது.

டெல் அவிவ் நகரில் இரண்டு ஏவுகணைகள் தரையில் மோதிய தால், கடுமையான சேதம் ஏற்பட் டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி கடுந்தொனியில் எச்ச ரிக்கை விடுத்த நிலையில் தாக்கு தல்களும் சரமாரியாக இடம்பெற் றது.

இவ்வாறான பின்னணியில், தற்போது ஈரான் தனது ஆயுத

# நைஜீரியாவில் துப்பாக்கிச்சூடு 100 பேர் பரிதாப பலி; பலர் மாயம்

(அபுஜா)



நைஜீரியாவின் மத்திய பெனுவே மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 100 பேர் கொல் லப்பட்டு உள்ளனர்.

நைஜீரியாவின் மத்திய பெனுவே மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் மர்மநபர்கள் திடீரென துப் பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 100 பேர் கொல் லப்பட்டனர். பலர் மாயம் ஆகி உள்ளனர். 20 இற் கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர்.

இந்தப் பதற்றங்கள் பெரும்பாலும் இன மற்றும் மதப் பிளவுகளால் மோச மடைகின்றன. கடந்த மாதம், நைஜீரியாவின் க்வெர் வெஸ்ட் மாவட்ட த்தில் வார இறுதி நாட்களில் நடந்த தொடர் தாக்குதல் களில் குறைந்தது 42 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை நடந்த துப்பாக்கிச்சூட்டில் 500 பேர் உயிரிழந்தனர். 22 லட்சத்திற்கு அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள் ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (நி-8)

# இஸ்ரேல்-ஈர...

# பற்றி எரி...

(டெஹ்ரான்)

ஈரான் அணுசக்தி திட் டங்கள் மற்றும் இரா ணுவத் தளபதிகளை குறி வைத்து இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை ஆப் ரேஷன் ரைசிங் லயன் என்ற வான்வழித் தாக்கு தலை நடத்தியது.

இதில் 78 பேர் உயிரிழந்ததாகவும், 320 பேர் படுகாயமடைந்ததாகவும் ஈரான் ஐநா பிரதிநிதி தெரி வித்தார்.


இதற்கு பதிலடியாக நேற் றுக் காலை வரை, ஈரான் "ஆப்ரேஷன் ட்ரூ பிராமிஸ்" என்ற பெயரில் டெல் அவிவ் மற்றும் ஜெருசலேம் மீது ஏவுகணைகளை ஏவியது.



இதில...
பட்டு...
ந்தன...
னில்...
தலி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ல்-ஈரான் போர் ...................... லகப்போர்!



பலத்தை காண்பிக்கும் வகையில் ஒரு காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த காணொளியில் நவீன ரக ஏவுகணைகள் மற்றும் உயர்தர ட்ரேன்கள் என்பன பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த காணொளியில் "நீங்கள் 3 ஆம் உலகப் போருக்கு தயாரா?" எனவும் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மத்திய கிழக்கில் எப்போது வேண்டுமானலும் 3 ஆம் உலகப் போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## அமெரிக்கா-ஈரான் இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான
# பேச்சுவார்த்தை ரத்து



(வோஷிங்டன்)

இஸ்ரேல்-ஈரான் இடையேயான கடும் மோதலால் மத்திய கிழக்குப் பகுதியில் போர்ப் பதற்றம் நீடித்து வருகிறது.

அணு ஆயுதத்தை தயாரிப்பதில் ஈரான் தீவிரமாக உள்ளது என்றும் அது தங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி ஈரான் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பை மீறி ஈரானின் ஏவுகணைகள் இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்கின. நேற்றும் இரு நாடுகளும் பரஸ்பர தாக்குதல்களில் ஈடுபட்டன.

இதற்கிடையே தங்களது தாக்குதல்கள் தொடரும் என்று இஸ்ரேலும், ஈரானும் அறிவித்தன.

இஸ்ரேலும், ஈரானும் தொடர்ந்து 3 ஆவது நாளாக பரஸ்பரத் தாக்குதலில் ஈடுபட்டு வருவதால் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா-ஈரான் இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான 6 ஆம் கட்ட பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை ஓமானில் நடைபெற இருந்த நிலையில் அதில் பங்கேற்க ஈரான் மறுத்துவிட்டது.

இஸ்ரேல் மீது ஏவப்பட்ட ஏவுகணைகளைத் தடுத்து நிறுத்த இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவியது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ரான் இடையே தீவிரமடைந்த மோதல்
# ரியும் எண்ணெய் கிடங்கு



இரு நாடுகளும் பரஸ்பரம் ஏவுகணைகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

இஸ்ரேல் வீசிய ஏவுகணையால் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள எண்ணெய்க் கிடங்கு பற்றி எரிந்து வருகிறது.

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்களை பல ஆண்டுகளுக்கு தாமதப்படுத்தும் வகையில் தாக்குதல் நடத்தி சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் இஸ்ரேலின் தாக்குதல்களில் குறைந்தது 80 பேர் கொல்லப்பட்டதாகவும், 800 பேர் காயமடைந்ததாகவும் ஈரானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்டவர்களில் 20 குழந்தைகள் அடங்குவர். (நி-8)

...தில் ஒருவர் கொல்லப்...டு, 34 பேர் காயமடை...னர். ரிஷோன் லெசியோ...ல் நடத்தப்பட்ட தாக்கு...தில் இருவர் கொல்லப்பட்டு 19 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் இஸ்ரேல் - ஈரான் நாடுகள் இடையேயான மோதல் தீவிரமடைந்துள்ளது.

# இஸ்ரேல் தாக்குதலில் அமெரிக்காவிற்கு பங்கில்லை
## ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

"இஸ்ரேல் தாக்குதலில் அமெரிக்கா பங்கு இல்லை. அமெரிக்காவை ஈரான் குறிவைத்து தாக்குதல் நடத்தினால் கடும் பதிலடி கொடுப்போம்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் இடையே மோதல் தீவிரமடைந்த நிலையில், இரு நாடுகளும் ஏவுகணை தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. ஈரானில் 80 பேரும், இஸ்ரேலில் 4 பேரும் உயிரிழந்தனர்.

இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் டெஹ்ரானில் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஈரான் மீதான தாக்குதலுக்கும், அமெரிக்காவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஈரானால் நாம் எந்த வகையிலும் தாக்கப்பட்டால், அமெரிக்க ஆயுதப் படைகளின் முழு பலமும் வலிமையும் இதற்கு முன் கண்டிராத அளவில் பதிலடி கொடுக்கும்.

இருப்பினும், ஈரானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தத்தை எளிதாகச் செய்து, இந்த இரத்தக்களரி மோதலை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என ட்ரம்ப தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை வந்தடைந்தார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளார். இந்த விஜயத்தில் ஜனாதிபதியுடன் சென்றிருந்த வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் தலைவர்ஆகியோரும்கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்கள் நேற்றுக் காலை 8.58 மணிக்கு டோஹாவிலிருந்து கட்டார் ஏர் வேஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# 220 கிலோகிராம் கஞ்சா மீட்பு

(அராலி)

யாழ்ப்பாணம் - வடமராட்சி, பொலிகண்டி பகுதியில் 220 கிலோக்கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் படகு ஒன்றும் வெளியிணைப்பு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலையில் இராணுவப் புலனாய்வுத்துறை மற்றும் சிறப்பு அதிரடிப் படை இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இலங்கை இராணுவ புலனாய்வுத் துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடல் மார்க்கமாக கொண்டு வந்த கஞ்சா 220 கிலோகிராமை இறக்கிக் கொண்டிருந்த போது இராணுவ புலனாய்வுத்துறையும், சிறப்பு அதிரடி படையினரும் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் 220 கிலோகிராம் கஞ்சாவும், படகும் அதன் வெளியிணைப்பு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட 220 கிலோகிராம் கஞ்சாவையும், படகு மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் என்பனவற்றை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்க சிறப்பு அதிரடிப் படையினர் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8-104)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி-பா-10 3/4
உயரம்: 5'9"
தகைமைஃதொழில்: Bsc, Accounting Executive
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15644

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
தகைமை/தொழில் Management (UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்
தொ.இ: B/15645

பபிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
உயரம்:6"
தகைமை/தொழில்:BBM, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15649

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்:பூரம்
கி-பா- 21
உயரம்:5'6"
தகைமை/தொழில்-BCom, Auditor
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15650

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி-பா-33
8இல் செவ் உயரம்:6"
தகைமை/தொழில்: BSc, PHD (Newzealand)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15651

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
12 இல்செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA(Following)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15687

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-திருவாதிரை
1இல்செவ்
கி-பா-29 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in IT, Executive Officer
எதிர்பார்ப்பு: வெளிநாடு .உத்தியோகம்
தொ.இ: G/15689

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-பரணி
7இல் செவ்
கி.பா -81 உயரம்-5'6"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15691

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:சித்திரை
12இல்செவ்
கி.பா –24
உயரம்: 5'5"
தகைமை/தொழில்-A/L, உப தபாலதிபர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15693

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:மகம்
2இல்செவ் கி.பா –34
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -BSc, London
எதிர்பார்ப்பு: வெளிநாடு (PRஉள்ளவர்)
தொ.இ: G/15698

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 395

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# முட்டாள்கள்

முட்டாள்களிலே மூன்று வகை உண்டு என்கிறார் ஒரு பெரியவர்.

அது எப்படி? முதல் வகை முட்டாள்கள் எப்படி என்றால் அவர்களுக்கு உண்மையிலேயே ஒன்றும் தெரியாது. அதுமட்டுமில்லை தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. ரொம்ப அப்பாவிகள். இது சாதாரண வகை. இரண்டாவது வகை எப்படி என்றால் அவர்களுக்கு எதுவுமே தெரியாது அதே சமயம் தெரிந்தது மாதிரி காட்டிக் கொள்ளத் தெரியும்.

சங்கீதம் என்றால் என்ன என்றே தெரியாது. ஆனால் முதல் வரிசையிலே உட்கார்ந்து கொண்டு தெரிஞ்சது மாதிரி தலையை ஆட்டிக் கொண்டு இருப்பார்கள்!

ஒன்றுமே தெரியாமல் ஆனால் தெரிஞ்சது மாதிரிக் காட்டிக் கொள்கின்ற இந்த இரண்டாவது வகை இருக்கிறார்கள் பாருங்க... அவர்கள் ஆசாமிகள்

அவர்கள் எல்லாம் கொஞ்சம் படித்த முட்டாள்கள்.

மூன்றாவது வகை முட்டாள்கள் எப்படி என்றால்

தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும்.. இவர்களே ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்!

தான் ஒரு பூஜ்யம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

நமக்குத் தெரியாது!நாம் அவர்களைப் பெரிய அறிவாளிகள் என்று மனப்பூர்வமாக நினைத்துக் கொண்டிருப்போம்!

பாமரர்கள், படித்தவர்கள், பெரிய மனிதர்கள் இவர்களுக்கு மத்தியிலே இந்த மூன்று வகையான ஆசாமிகளையும் இன்றைக்கு சர்வ சாதாரணமா நாம் கண்டு பிடிக்கலாம். ஆனால் அப்படி கண்டு பிடிக்கறதுக்கு நமக்குக் கொஞ்சம் புத்திசாலித்தனம் வேணும்!

இந்த உலகத்துலே ஒவ்வொருத்தரும் முதலிலே ஒரு சாதாரண முட்டாளாகத்தான்பிறக்கிறார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் சாதாரண முட்டாள் தான்!

அவர்களுக்கு எதுவும் தெரியாது.. தனக்கு எதுவும் தெரியாது என்பதும் அவங்களுக்குத் தெரியாது.

ஆகையினாலே அதெல்லாம் முதல்வகையைச் சேர்ந்ததுதான். அதன் பின்பு வளர வளர- உலக விடய ஞானம் என்கின்ற பழத்தை உண்ண வேண்டியிருக்கு! விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது!எளிமையான முட்டாள்தனத்துலேயிருந்து அறிவுள்ள முட்டாள் தனத்துக்கு ஒரு குழந்தை படிப்படியாக மாறுகிறது.

பெரியவனாக ஆக ஆக... சிலபேர் தெரியாததையும் தெரிந்தது மாதிரி காட்டிக்கொள்ளத் தெரிந்து கொள்கின்றான்.

சிலபேர் தனக்கு தெரியாது என்கிறதையும் மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறார்கள்!

தான் தனது என்கின்ற அகங்காரத்தின் உச்சிக்குச் செல்லும் போது.

ஒரு நாள் விழிப்பு நிலையிலே எல்லாத்தையும் ஒழித்துவிட்டு... ஒன்றுமே இல்லாத தன்மையை அடைய வேண்டும் . மனம் இயங்கும்போது ஒருவன் உணர்வில் இயங்குவான். இதுதான் அவனை ஞானத்தன்மைக்கு அழைத்துக்கொண்டு போகும். என்கிறார் (ஓஷோ). நண்பர் ஒருத்தர் ஒரு கதை சொன்னார்.ஒரு பெரிய மனுஷன் அவருக்கு ஒரு வேலைக்காரன்.அந்த வேலைக்காரன் எதையும் சரியாகப் புரிந்து கொண்டு வேலை செய்யிறதில்லை. அதனாலே அந்தப் பெரிய மனிதன் என்ன செய்தார் என்றால் ஒரு தாளிலே முட்டாள் என்று எழுதி அந்த தாளை அவன் கழுத்திலே மாட்டிவிட்டுவிட்டார்.

அவனும் அதைப்பற்றி கவலைப்படவில்லை அப்படியே வைத்துக்கொண்டான்.ஒரு நாள் அந்த பெரியமனிதன் வயதாகி சாகக்கிடக்கிறார். இந்த வேலைக்காரன் அவரிடம் போய் நிற்கிறான்.இதோ பாருப்பா,இனிமேலாவது நீ புத்திசாலியா இரு - நான் போய் வருகிறேன்என்றார். எங்கே போகின்றீர்கள் ஐயா? என்று கேட்டான் இவன்.திரும்பி வர முடியாத இடத்துக்குப் போகிறேன் என்றார்.அந்த இடம் எங்கே இருக்கின்றது? என்றான். எனக்குத் தெரியாது என்றார். அதுக்கு எந்த வழியாக போகப் போகின்றீர்கள் என்றார். அதுவும் எனக்குத் தெரியாது என்றார்.அது எவ்வளவு தூரத்துலே இருக்கிறது? என்றார்.அதுவும் எனக்குத் தெரியாது என்றார். காரை எடுத்துக்கொண்டு போகலாமா? என்றான்,முடியாது! என்றார்.

வண்டியிலே போகலாமா?என்றார்.அதுவும் முடியாது! என்றார்.ஆனா போகிறது மட்டும் நிச்சயமா?என்றார்.ஆமாம்,- என்றார். இப்ப அந்த வேலைக்காரன் சொன்னான்,ஐயா எங்கே போகிறது என்றும் தெரியவில்லை, வழியும் தெரியவில்லை. எவ்வளவு தூரம் என்றும் தெரியவில்லை. வண்டியிலே போகிறதா,காரிலே போகிறதா என்றும் தெரியவில்லை,ஆனால் போகப் போகிறதுமட்டும் நிச்சயம்-என்று சொல்கிறீர்கள்.அதனாலே இது என்னைவிட உங்களுக்குத்தான் பொருத்தம் எனறு சொல்லி தன் கழுத்திலே இருந்த "முட்டாள்" என்கிற தாளை எடுத்து தன்னுடைய முதலாளி கழுத்திலே மாட்டிவிட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப் புனரமைப்பு வேலைகளை கண்காணிக்க குழு

## சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் கோரிக்கை

(சாவகச்சேரி)

வீதிப் புனரமைப்பு நடவடிக்கை தொடர்பில் கண்காணிக்க, பொது மக்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றினை அமைக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் கிஷோர் வலியுறுத்தியுள் ளார்.

சாவகச்சேரி நகரசபை எல் லைக்குள் வீதி அபிவிருத்தி திணைக் களத்தினால் மீசாலை அல்லாரை வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவ் வீதிப் புனரமைப்பின் தரம் தொடர் பிலும், புனரமைப்பின் போது பின் பற்றப்படுகின்ற நடைமுறை தொடர்பி லும் பொதுமக்களால் பல்வேறு விமர்ச னங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நகரசபையின் உப நகரபிதா ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் வீதிப் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டதோடு பொதுமக்களோடும் கலந்துரையாடினர்.

இதன்போதே உப தவிசாளர் கிஷோர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரோடு கலந்துரையாடி அப் பகுதி மக்களை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழு ஒன்றினை உருவாக்கிய பின்னர் வீதி புனரமைப்பு பணிகளை முன் னெடுக்குமாறு வேண்டுகோள் விடுத் தார். அதுவரை புனரமைப்பு வேலை களை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். (நி-3-30)

# படப்பிடிப்பிற்காக இலங்கை வந்தார் நடிகர் மோகன்லால்



(கொழும்பு)

பிரபல இந்திய நடிகர் மோகன்லால் விஸ்வநாதனும் மற்றொரு இந்திய நடிகரான குஞ்சாக்கோ போபனும் படப் பிடிப்பிற்காக இலங்கை வந்துள்ளனர்.

பேட்ரியோட் (Patriot) என்ற படத்தின் 3 நாட்கள் படப்பிடிப்பிற்காக குறித்த நடிகர்கள் உள்ளிட்ட படக்குழுவினர் நேற்று இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் 8 மொழிகளில் இந்த படம் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் கொச்சி நகரில் இருந்து சிறீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான UL-166 விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்துள்ள னர். (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பனங்கற்கண்டு (palm candy)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஸ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சர்க்கரை அல்லது சீனிக்கு மாற்றாக ஒரு நல்ல சத்து தரும் அளவான இயற்கை இனிப்புப் பொருளாகும். பனங்கற்கண்டு பனை மரத்திலிருந்து பதநீரைக் காய்ச்சி பெறப்படும் ஒரு பொருளாகும். சர்க்கரை அல்லது சீனிக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். சித்த மருத்துவத்தில் உப உணவு களில் எள் உருண்டை, களி மற்றும் பல பலகாரங்களில் சேர்க்கப்படும் ஆரோக்கியமான பொருளாகும். இயற் கையான சத்துக்களைக் கொண்டிருக் கக்கூடிய இதை நீரிழிவு நோயாளி களும்பயன்படுத்தலாம். வழக்கமான வெள்ளைக் கரும்புச் சர்க்கரைக்கு மாற்றாக பயன்படுத்தப்படும் வெள்ளை இனிப்பு இந்தப் பனங் கற்கண்டு. இது எந்த வேதியியல் செயன் முறைகளிலும் பயன்படுத் தாமல் தயாரிக்கப் படக்கூடியது. இதன் ஊட்டச்சத்துக்களும் நன்மைகளும் அழியாமல் தயாரிக்கப்படுவதால் இது நன்மை தரக்கூடியது. சித்த மருத்துவத்தில் மருந்துகளில் குழந் தைகளிற்குப் பயன்படுத்தப்படும் பாணி மருந்துகளில், மருந்துகளிற்குப் பயன் படுத்தப்படும் அனுபானங்களிலும் முக்கிய பொருளாகும். பனங்கற்கண்டு இரும்புச்சத்து மற்றும் தாதுச்சத்துக் களான பொட்டாசியம், துத்தநாகம் , பொஸ்பரஸ், கல்சியம் செம்புச்சத்து, மங்கனீசு ஆகியன காணப்படுகின் றது. இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவைக் கூட்டக் கூடியது. குருதிச் சோகை நோய் வராமல் தடுக்கக் கூடியது, என்புகளை பலப்படுத்தக் கூடியது. அளவாக எடுத்துக் கொள்ளும் போது இன்சுலின் எதிர்ப்பு, நீரிழிவு அபாயத்தை இவை குறைக்க செய்கிறது. அத்துடன் உடம்பிற்கு ஊட்டச்சத்துக்களையும் இது அழிக்கும். பனங்கற்கண்டின் சர்க்கரை உயர்த்தும் திறன் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. மற்றும் குருதி அமுக்கத்தை அதிகரிக்க விடாமல் சீராகப் பேணக் கூடியது. நல்ல செரிமானத்தை ஊக்கு விக்கவும் செய்கிறது. உடலில் தாது உறிஞ்சுதல் மேம்படவும் பனங் கற்கண்டு உதவக்கூடும் என்று ஆய்வு கள் தெரிவிக்கின்றன. அத்துடன் இது குடற்பகுதிகளைப் பாதுகாத்து செரிக்காத உணவை செரிமானத்திற்குள்ளாக்கும் நொதியங்களை உருவாக்க உதவுகிறது. பனங்கற்கண்டில் இருக்கும் அதிக பொட்டாசியம் தசைச் சுருக்கம் மற்றும் இதயத்துடிப்பு போன்ற நரம்பு மண்டல செயற்பாட்டை பராமரிக்க உதவுகிறது. உடலுக்குப் போதுமான அளவு பொட்டாசியம் எடுத்துக் கொள்வது உயர் இரத்த அழுத்தத்தை சீராகப் பேண உதவுகிறது. பனம் கற்கண்டில் மற்றைய சர்க்கரைகளைக் காட்டிலும் விற்ற மின்கள், தாதுக்கள் மற்றும் ஊட்டச் சத்துக்கள் அதிகளவில் உள்ளன.

என்று ஆய்வுகள் சொல்கிறன. இவ் ஊட்டச்சத்துக்களில் பைட்டோ நியூட்ரியண்ட்ஸ் உள்ளடங்கியுள்ளது. இத்தாவர அடிப்படையிலான கலவைகள் ஆக்ஸிஜனேற்ற விளைவைக் கொண்டிருக்கின்றன. இது நாட்பட்ட நோய்களுக்கு வழிவகுக்கும் , உயிரணு சேதத்தையும் தடுக்கச் செய்கிறது. உடலுக்குச் சோர்வு இல்லாமல் சக்தி தரும் பானமாக பனங்கற்கண்டு உள்ளது. இதில் விற்றமின் B, இரும்பு மற்றும் கல்சியம் போன்ற தாதுக்கள் நிறைந்திருப்பதால் பனங்கற்கண்டை குழந்தைகள் முதல் பெரியவர்கள் ஆற்றல் தரும் உணவுச் சேர்க்கையாக விளங்குகின்றது. வெப்ப காலத்தில் ஏற்படும் வைரஸ் தொற்றுக்கள் , அம்மை நோய்கள் போன்றவற்றிற்கு பசுவின் பாலைக் காய்ச்சி பனங்கற்கண்டு சேர்த்து பயன்படுத்தலாம். சளி இரும லுக்குச் சிறந்தது. பனங்கற் கண்டில் இருக்கும் நார்ச்சத்தானது செரிமானத்தை ஒழுங்கு படுத்தவும் மலச்சிக்கலைத் தடுக்கவும் உதவுகிறது. புரோபயட்டிக்கின் சிறந்த ஆகாரமாக பனங்கற்கண்டு உள்ளது. இவை குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது. பனங் கற்கண்டில் இருக்கும் மக்னீசியம் மற்றும் சில முக்கிய தாதுப் பொருட்கள் மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. மருத்துவ குணம் கொண்ட சமையலறை பொருட்களில் ஒன்றாக இருப்பது பனங்கற்கண்டு . இதிலிருக்கும் ஊட்டச்சத்துக்கள் உடலைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகின்றது.

பனங்கற்கண்டை வெறுமனே வாயில் போட்டு மென்று உமிழ்ந்தாலே நல்ல பலன்களைப் பெறலாம். பனங்கற்கண்டு பண்டைய மக்களின் இனிப்பு பொருளே பனங் கற்கண்டாகும். பனங்கற்கண்டில் குறைந்த அளவு இனிப்பே இருப்பதால் உடலுக்கு மிகவும் பாதுகாப்பானது. பனங் கற்கண்டை வாயில் வைத்துக் கொண்டு உமிழ் நீரை விழுங்கி வர தொண்டை கரகரப்பு சளியை வெளியேற்றுதல் மற்றும் இருமல் போன்றவற்றை நீக்கக் கூடியது. 1/4 தேக்கரண்டி மிளகுத் தூள், அரை தேக்கரண்டி



பசு நெய் கலந்து சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

கருவுற்ற பெண்களுக்கு மிகவும் சிறந்த ஊட்டச்சத்துநிறைந்த பொருளாகும். இரவு உறங்கச் செல்வ தற்கு அரை மணி நேரத்திற்கு முன் னர்அரைத் தேக்கரண்டி மஞ்சள் தூள் போட்டு மிதமான சூட்டில் ஒரு டம்ளர் பசும்பால் அருந்தலாம். இது தூக் கத்தை ஊக்குவிக்கும், செரிமா னத்தை எளிதாக்கும்.மன அழுத் தத்தை நீக்கக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 799





பார்த்திபேந்திரன் இப்போது தலையிட்டு, "அரசே! இவர்கள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவது ஏதோ பெண்ணை பற்றிய விடயமாகக் காண்கிறது. ஆகையால் இவர்களைத் தனித் தனியாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது நலம்!" என்றான்.

"ஆம், பார்த்திபா! நானும் அப்படித்தான் கருதுகிறேன். நீங்கள் மூன்று பேரும் தனித் தனியாகப் பழுவூர் இளைய ராணியைப் பார்த்து அவளுடைய மோக வலையில் விழுந்திருக்கிறீர்கள், ஆகையினால் தான் ஒருவரை ஒருவர் விழுங்கிவிடப் பார்க்கிறீர்கள்!" என்று கரிகாலர் கூறிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

பார்த்திபேந்திரனுடைய முகம் சிணுங்கியது அவன் "பிரபு! தாங்கள் இன்றைக்கு எந்த முக்கிய விடயத்தையும் இலேசாகக் கருதிச் சிரிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. நல்லது நானும் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். இந்த வந்தியத்தேவன் பேரில் எனக்கும் பல சந்தேகங்கள் இருக்கின்றன. முக்கியமானதை மட்டும் இப்போது சொல்லுகிறேன். இவனைத் தீப்பிடித்த கப்பலிலிருந்து காப்பாற்றுவதற்காகவே தங்கள் அருமைச் சகோதரர் நடுக்கடலில் கடும் புயலில் குதித்தார். பிறகு பொன்னியின் செல்வரைக் காணவே இல்லை. இவன் மட்டும் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் கொட்டாப் புளியைப் போல் இங்கே வந்து முளைத்திருக்கிறான். தங்கள் சகோதரர் என்ன ஆனார் என்று இவனைக் கேளுங்கள். அவரைக் கடல் கொண்டிருந்தால் அதற்கு இந்தப் பாதகனே காரணமாவான்!" என்றான். கரிகாலர் வந்தியத் தேவனைப் பார்த்து "இதற்கு என்ன மறுமொழி சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா! நான் இவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லுவதற்கு முன்னால், இவர் ஒரு கேள்விக்கு விடை சொல்லட்டும். பொன்னியின் செல்வரை இலங்கையிலிருந்து இவர்தான் தம்முடைய கப்பலில் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். முதன் மந்திரி அநிருத்தரும், சேநாதிபதி பூதிவிக் கிரமகேசரியும் இலங்கையிலேயே இருக்கும்படி பொன்னியின் செல்வரைக் கேட்டுக் கொண்டார்கள். ஆயினும் தமையன் கட்டளையைப் பெரிதாய் மதித்து இளவரசர் இவருடைய கப்பலில் ஏறிக் கிளம்பினார், அவரை ஏன் இவர் பத்திரமாகத் தங்களிடம் கொண்டு வந்து சேர்க்கவில்லை? நடுக்கடலில் பொன்னியின் செல்வர் குதித்த போது இவர் ஏன் பார்த்துக் கொண்டு நின்றார்? ஏன் இளவரசரைத் தடுக்கவில்லை? ஏழையும் அநாதையுமான என்னைக் காப்பாற்றுவதற்காகப் பொன்னியின் செல்வர் தம் உயிருக்குத் துணிந்து இறங்கினாரே! வீரபல்லவ குலத்தின் தோன்றலாகிய இவரும், இவருடைய ஆட்களும் இளவரசரைப் பாதுகாப்பதற்காக ஏன் கடலில் குதிக்கவில்லை? அவரைக் கடல் கொண்டுபோவதை வேடிக்கை என்று எண்ணிப் பார்த்துக் கொண்டு நின்றார்களா?"

அதன் உண்மையைக் குறித்து நானே சாவகாசமாக விசாரித்துத் தீர்ப்பு கூறுகிறேன். அவன் கேட்ட கேள்விகளுக்கு நீ விடை சொல்லப் போகிறாயா?" என்று கரிகாலன் கேட்டான்.

கந்தமாறன் தட்டுத்தடுமாறி மென்று விழுங்கிக் கொண்டு, "ஐயா! அந்த விடயங்களைப்பற்றி நான் யாரிடமும் சொல்லுவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறேன்" என்றான்.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்

# கலப்படம்



வந்தவர் தன் மீசையை மெல்ல வருடியபடி நீங்கள் நல்லா யோசனைபண்ணி என்னை அழையுங்கள். நீங்கள் அழைப்பெடுத்த பின் எங்களுடைய ஆட்கள் உங்கள் கடைக்கு பொருட்களை கொண்டு வந்து இறக்கிடுவார்கள். தனது தொலைபேசி எண்ணை எழுதி கொடுத்து விட்டு நான் வரட்டுமா? என்று சொல்லி விட்டு சென்றார்.

ராசாராமன் ஐயா, இருங்கள் தேநீர் குடித்துவிட்டு போகலாம். இவனே எதிரில் உள்ள டீக்கடைக்கு அவரை கூட்டி சென்றான், நீங்கள் என்னுடன் வந்தால் கடையை யார் பார்ப்பார்கள்? வந்தவர் கேட்டதற்கு இந்த ஊர் மக்கள் மிகவும் நேர்மையானவர்கள், நான் வரும் வரைக்கும் காத்திருந்து பொருட்கள் வாங்கிக் கொண்டு போவார்களே தவிர எந்த பொருளையும் தொடக்கூட மாட்டார்கள், என்று பெருமையுடன் சொன்னான். அப்படிப்பட்ட மக்களுக்காகவாவது இவன் நியாயமாய் நடக்கணும் இல்லையா குழந்தைகளே.

ஒரு வாரத்தில் இவன் தன்னுடைய பொருட்களை எல்லாம் விற்று பணமாக்கி விட்டான். அந்த பணத்தை ஒரு இடத்தில் பத்திரப்படுத்தியும் விட்டான். அதன் பின் அவர் சொன்ன தொலைபேசி எண்ணுக்கு போன் செய்தான்.

தான் அவர் கடையில் பொருட்களை எடுத்துக் கொள்வதாகவும், அதற்கான பட்டியலை சொல்வதாகவும் தெரிவித்தான் அவர்களும் இவன் கேட்ட அனைத்தையும் எழுதிக் கொண்டு, பொருட்களை அனுப்பி வைப்பதாக சொன்னார்கள்.

சொன்னது போலவே மறுநாள் காலையில் ஒரு மாட்டு வண்டியில் இவர்கள் கேட்ட அனைத்து பொருட்களும், இறக்கப்பட்டன. இறக்கிய பொருட்களுக்கான தொகையும் ஒரு சீட்டில் எழுதப்பட்டு அவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். அடுத்த வாரம் வந்து விற்ற அளவுக்கு பணத்தை பெற்றுக்கொள்வதாக சொல்லி சென்றனர்.

இப்படி மூன்று மாதங்களுக்கு வரவு செலவுகள் நடந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் அன்று வந்தவர் ராசாராமனை பார்க்க வந்தார். ஐயா வாருங்கள் அவரை வரவேற்று உபசரித்தான். அவர் மெதுவாக அவனிடம் வந்து ஐயா உங்களிடம் ஒரு இரகசியம் சொல்லணும். இங்க யாரும் இல்லையா? என்று கேட்டார்.

ராசாராமன் குனிந்து எதுன்னாலும் சொல்லுங்கள் ஐயா? இந்த ஊர் ஆளுங்க ரொம்ப நல்லவர்கள் என்று சொல்லியிருக்கிறேனே. யாரும் வரமாட்டார்கள்.

ஒண்ணுமில்லை என்னிடம் கொஞ்சம் பணமிருக்கு. அதை இங்க வைத்துவிட்டு போனால் பத்திரமாக இருக்குமா?இரகசியமாய் கேட்டார். பணம் என்றவுடன் ராசாராமனின் கண்கள் விரிந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பட்ட துன்பத்தை விட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது. – சுவாமி விவேகானந்தா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 3ஆம் உலகப் போரை தடுக்க முடியாது போலும்

மனித குலத்தைப் படைத்த இறைவன் கூடவே மனித குலத்தைப் பிறநாசப்படுத்தக் கூடியவர்களையும் படைத்தனன் போலும்.

ஆம், ஈரான் – இஸ்ரேல் போர் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திவிடப் போகிறதோ என்ற ஏக்கத்தைத் தந்துள்ளது.

ஈரானும் இஸ்ரேலும் மாறி மாறித் தாக்குதலை நடத்தும்போது அதனால் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகிப் போவர்.

தவிர, இரு நாடுகளுக்கிடையேயும் ஏற்பட்டுள்ள போரை முடிவுறுத்துகின்ற முயற்சியில் ஈடுபடாமல், போரை இன்னும் வலுப்படுத்துவதாக உலக நாடுகள் சில நடந்து கொள்வது வேதனைக்குரியது.

அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் நடவடிக்கைகள் அதர்மத்தை ஊக்குவிப்பதாக அமைகிறது.

ஆம், இஸ்லாமிய மக்கள் மீது அமெரிக்காவுக்கு இயல்பாக உள்ள வெறுப்பை பழிதீர்க்க நினைப்பது அவ்வளவு நல்லதல்ல.

ஏலவே இஸ்ரேல், காசா மீது நடத்திய மிகக் கொடூரமான போரை அமெரிக்கா தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்.

இருந்தும் அதனைச் செய்யாமல் இஸ்ரேலுக்கு தனது ஆதரவை அமெரிக்கா தெரிவிக்க, இஸ்ரேல் கண்மண் தெரியாமல் காஸா மீது மிக மோசமான தாக்குதல்களை நடத்தி காஸா மக்களைக் கொன்று குவித்தது.

உண்மை. காஸாவில் குழந்தைகள், பெண்கள் என ஏகப்பட்ட மக்களைக் குண்டு போட்டு கொன்ற இஸ்ரேலின் செயல் மிருகத்தனமானது.

அதிலும் காஸாவில் உள்ள மருத்துவ மனைகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் மிலேச்சத்தனமானவை. இருந்தும் அமெரிக்கா அதனைக் கண்டிக்கவோ கண்டுகொள்ளவோ இல்லை.

இதன் காரணமாக ஏனைய நாடுகளும் அமைதி காத்தன.

எனினும் காஸா மக்களுக்கு இஸ்ரேல் செய்த அநியாயத்தை தடுத்து நிறுத்த உலக நாடுகள் முன்வராமை உலகின் வஞ்சகத் தனத்தைச் சுட்டி நிற்கிறது.

ஆம், காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை அமெரிக்கா தடுத்து நிறுத்தியிருக்குமாயின், ஈரான் – இஸ்ரேல் போர் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது.

இப்போது கூட, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈரானை எச்சரிக்கின்றாரே தவிர இஸ்ரேலைக் கண்டிக்கவில்லை.

தவிர அமெரிக்காவின் ஆயுதங்கள் இஸ்ரேலிடம் உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி கூறுவதன் மூலம் இஸ்ரேல் எவ்வாறு நடந்து கொண்டாலும் அதனை ஏனைய நாடுகள் சகித்துக் கொள்ள வேண்டும் என்பது போல அமெரிக்க ஜனாதிபதியின் நிலைப்பாடு உள்ளது.

இந் நிலைப்பாடானது மூன்றாம் உலகப் போருக்கான ஏற்பாடேயன்றி வேறில்லை.

எது எவ்வாறாயினும் மூன்றாம் உலகப் போரைத் தடுக்க முடியாது என்பது போலவே சமகால சூழ்நிலை உள்ளது.

## உறவுகளின் அலுவலகத்தை அகற்றக் கோரிய தவிசாளர்

### எதிர்ப்புத் தெரிவித்து அம்பாறையில் இன்று போராட்டம்

(கிளிநொச்சி)

அம்பாறை - தம்பிலுவில் மத்திய சந்தை பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு தவிசாளர் சசிக்குமார் அறிவுறுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை அம்பாறையில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஊடக சந்திப்பு நேற்று(15) நடைபெற்றபோதே சங்கத்தின் தலைவி யோகராசா கலாரஞ்சினி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. இந்த அரசும் அதற்கான நீதியைப் பெற்று தருவதற்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

அம்பாறை- தம்பிலுவில் மத்திய சந்தை பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு அதன் தலைவிக்கு தவிசாளர் சசிக்குமார் கூறியுள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று காலை அம்பாறையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கூறினார். (ந-4,7)

## வவுனியா மாநகர சபையை நாங்கள் கைப்பற்றுவோம்

### தேசிய மக்கள் சக்தி உறுதி

(வவுனியா)

வவுனியா மாநகர சபையின் ஆட்சியை நாங்களே கைப்பற்றுவோம் எனத் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இன்றையதினம் வவுனியா மாநகரசபைக்கான முதல்வர், பிரதி முதல்வர் தெரிவுகள் இடம்பெறவுள்ள நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வன்னிபிளாசா விடுதியில் நேற்று (15) இடம் பெற்றது.

தேசிய மக்கள் சக்தி, இலங்கை தொழிலாளர் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுவின் பிரதிநிதிகள் குறித்த கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்தனர்.

இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர் சிவசங்கர்,

நாம் சில தரப்புக்களுடன் பேசியிருக்கின்றோம். இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியால் சிறந்த ஒரு அதிகாரத்தை வழங்க முடியும் என்று நினைக்கும் கட்சிகள் எமக்கு ஆதரவினை வழங்கும்.

எனவே மாநகர சபையின் ஆட்சியினை நாம் கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் என்றார். (ந-4,7,250)

## பட்டதாரிகள் அரச வேலைக்காக மாத்திரம் காத்திருக்கக் கூடாது

### விவசாய அமைச்சர் லால்காந்த அறிவுரை

(கொழும்பு)

பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்புக்காக மாத்திரம் காத்திருக்காது பல்துறைகளிலும் தமது பங்களிப்பைச் செய்து நாட்டை வளப்படுத்த வேண்டும் என விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட நெல் விதைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

கடந்த காலங்களில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினோம்.

இவ்வாறு போராட்டம் நடத்தியதன் விளைவுகளைத் தற்பொழுது பார்க்க முடிகிறது.

அரசாங்கத்தை தொழில் வாய்ப்பு வழங்கும் ஓர் நிறுவனமாகக் கருத முடியாது. இந்த நாடு வீழ்ச்சியடைந்தமைக்கு தாம் உள்ளிட்ட அனைவரும் பொறுப்பு ஏற்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். (ந-4,7)

## மின்னுயர்த்தி விழுந்ததில் இளைஞன் உயிரிழப்பு

மொரட்டுவையில் அடுக்குமாடி ஹோட்டலில் மின் உயர்த்தி அறுந்து விழுந்ததில் 19 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோட்டலில் பணிபுரிந்த குறித்த இளைஞன் மின் உயர்த்தியைப் பயன்படுத்தியுள்ளார். இதன் போது, மின் உயர்த்தி அமைப்பு செயலிழந்து அறுந்து விழுந்ததில் இளைஞனுக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த இளைஞன்பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஹோட்டலின் முகாமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரட்டுவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-4,7)

## களுபோவிலவில் துப்பாக்கிச் சூடு

(கொஹுவலை)

கொஹுவலை பொலிஸ் பிரிவின் களுபோவில விகாரை வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் வீட்டின் வாயிலிலும் வீட்டை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் துப்பாக்கிச் சூட்டில் [illegible] பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் பணக்கொடுக்கல் வாங்கல் தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ள நிலையில்,

கல்கிஸைக் குற்றத் தடுப்பு பணியகம் மற்றும் கொஹுவலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-4,7)

## துப்பாக்கிகளுடன் இருவர் அதிரடிக் கைது

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் வெவ்வேறு இடங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களின் போது சட்டவிரோதமான முறையில் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 42,44 வயதுடைய அறலகங்வில கஜூவத்த மற்றும் சிகிரிய இலுக்வலப் பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் எனத் தெரியவருகிறது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்களை அதிரடிப்படையினர் அறலகங்வில மற்றும் சிகிரிய பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துள்ளனர். (ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 06

புருசோத்தமன்



புதுச்சேரிக் கம்பன் விழாவின் முதல் நாள் காலை அமர்வானது விழா மலர் வெளியீடு, விருதுகள் வழங்கிக் கௌரவித்தல், வழக்கறிஞர் த.இராமலிங்கம் அவர்களின் **கம்பன் தமிழ்** நூல் வெளியீடு, கம்பன் கழகம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் என்ற நிகழ்வுகளுடன் எழிலுரையும் இடம்பெற்றது.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் **'அறம் வளர்த்தோன்'** எனும் பொருளில் எழிலுரையாற்றினார்.

சபை நிறைந்த மக்கள் கூட்டம். மிகவும் அமைதியாக இருந்து கம்பவாரிதியின் பேச்சை கேட்டு இன்புற்றனர்.

உரை முடிவில் கம்பவாரிதி மேடையால் இறங்கிய போது, சபையிலிருந்த பேராளர்கள் முதற்கொண்டு சாமானிய மக்கள் வரை கம்பவாரிதியின் உரையைப் பாராட்டுவதிலும் அவரின் ஆசி பெறுவதிலும் முண்டியடித்ததைக் கண்டு மகிழ்ந்தேன்.




பொதுவில் புதுச்சேரி கம்பன் விழாவின் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஏலவே நிறுவப்பட்ட அறக்கட்டளைகள் மூலமே இடம்பெறும்.

குறித்த அறக்கட்டளை தனக்குரித்தான நிகழ்வுக்குரிய செலவை ஏற்றுக்கொள்ளும்.

தவிர, விழா அழைப்பிதழில் நிகழ்ச்சி அமைப்பு என்ற உப தலைப்பு இடப்படுவதுடன் முன்னிலை என்ற சொற்பதமும் அழைப்பிதழில் இடம்பெற்றிருக்கும்.

இங்கு கம்பவாரிதி ஆற்றிய எழிலுரை என்ற நிகழ்ச்சிக்கு வழக்குரைஞர் திருமிகு திருநாவுக்கரசு ராஜேஸ்வரி அறக்கட்டளை பொறுப்பேற்றிருந்தது.

அந்த அறக்கட்டளையை நிறுவிய சி.பி.திருநாவுக்கரசு அவர்கள் கம்பவாரிதி பேசுகின்ற போது அவருக்கு அருகில் அமர்ந்திருந்தார். இதுவே முன்னிலை என்ற சொற் பதத்தின் பொருளாகும்.

இதுபோலவே ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் ஒவ்வொரு அறக்கட்டளை பொறுப்பாகவுள்ளன.

அந்த அறக்கட்டளையின் நிறுவுநர் நிகழ்வு நடை பெறும் போது மேடையில் அமர்ந்திருக்கின்ற ஏற்பாடுகளும் உண்டு.

அந்தவகையில் புதுவைக் கம்பன் கழகம், விழாச்செலவுகளை மிக நுட்பமான முறையில் ஈடு செய்துகொள்வதைக் காண முடிகிறது.

அறக்கட்டளை நிறுவுநர்களை மேடையில் அமர வைத்து அவர்கள் முன்னிலையில் அந்த நிகழ்வு இடம் பெறுவதான ஏற்பாடு, அறக்கட்டளை நிறுவுநர்களை திருப்திப்படுத்துவதை நோக்காகக் கொண்டிருந்தது.

அதேநேரம் அறக்கட்டளைகளை நிறுவியவர்கள் மிகப் பெரும் தனவந்தர்களாகவும் வர்த்தகப் பேராளர்களாகவும் உள்ளனர் என்ற உண்மையையும் இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

இதையும் கடந்து, விழாவில் கலந்து கொள்ளும் பேராளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான மதியம் மற்றும் இராப்போசனங்களை சம்பந்தப்பட்ட அறக்கட்டளைகளே பொறுப்பேற்றுக்கொள்ளும்.

ஒவ்வொரு நிகழ்வின் நிறைவிலும் மதிய போசன அழைப்பு, இராப்போசன அழைப்பை சம்பந்தப்பட்ட அறக்கட்டளையினர் சபையில் வழங்கி விருந்துக்கு வாருங்கள் என அழைக்கின்ற சிறப்பம்சத்தையும் அங்கு காண முடிந்தது.

இந்த நடைமுறை கொழும்புக் கம்பன் கழகத்திலும் இருப்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

பாண்டிச்சேரி என்று பிரான்சிய ஆட்சியாளர்களால் அழைக்கப்பட்ட புதுச்சேரி, மிகப் பிரமாண்டமான விடுதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.


அதிலும் புதுச்சேரி நகராட்சியில் அடுத்தடுத்து பிரமாண்டமான விடுதிகள்.

அந்த விடுதிகளிலேயே மதியம் மற்றும் இராப்போசனம் ஒழுங்குபடுத்தப்படும்.

எங்கள் யாழ்ப்பாணத்தைப் போல வட்ட மேசையில் குந்தியிருக்கின்ற ஏற்பாடுகள் அங்கு இல்லை.

மிக நீண்டதும் அகண்டதுமான மண்டபத்தில் நீள் மேசைகளும் கதிரைகளும் அடுக்கப்பட்டிருக்கும். அந்த சாப்பாட்டு மேசைக்கு வெள்ளை விரிப்புக்கள் கிடையாது.

மாறாக, நியூஸ் பிறிண்ட் எனப்படும் பத்திரிகைகள் அச்சிடப்படும் தாள் நீளமாக விரிக்கப்படும். அதன்மேல் வாழை இலைகள்.



இங்கு எத்தனை ஆயிரம் பேர் சபையில் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் தலை வாழை இலைகளே பரிமாறப்படும்.

தவிர, பந்தி வைக்கின்ற நடைமுறை இன்னமும் அங்கு பின்பற்றப்படுகிறது.

வகை வகையான உணவுகள் தொடர்ச்சியாக வைக்கப்படும்.

இனிப்பு, புளிப்பு என அறுசுவை கலந்த உணவுப் பரிமாற்றம் அடேங்கப்பா என்று வியக்கச் செய்யும்.

இதில் தயிர், ஊறுகாய் கட்டாயமானது. அதிலும் இராப்போசனத்தின் போதும் வாழை இலையின் ஒரு மூலையில் ஊறுகாய் வைக்கப்பட்டிருக்கும். கூடவே உப்புத்தூளும் அதன் அருகே வைக்கப்படும்.

உணவு வகைகளைப் பட்டியல் படுத்துவதோ அன்றி கறி வகைகளை இனங்காண்பதோ எங்களைப் பொறுத்தவரை முடியாத காரியம்.

ஆம், நாங்கள் யாழ்ப்பாணத்தில் மிளகாய்த் தூளை கொட்டி வைக்கின்ற குழம்பு அங்கு கிடையவே கிடையாது.

மாறாக மல்லி, நற்சீரகம், பெருஞ்சீரகம் உள்ளிட்ட மாசாலாப் பொடி சேர்க்கப்பட்ட கறிவகைகள். அதிலும் காய்கறிகள் திண்மமாக இருப்பதில்லை. எல்லாமுமே கரைசல் ஆக்கப்பட்டு விடும்.

விடுதியின் நுழைவாயிலில் விருந்து கொடுக்கின்றவர்களின் குடும்பத்தினர் நின்று, விருந்துக்கு வருகின்றவர்களை இருகரம் கூப்பி வரவேற்கின்ற பண்பாடு உண்மையிலேயே மெய்ச்சுதற்குரியது.

அதிலும் அவர்கள் அனைவரும் வெள்ளை வேட்டி, வெள்ளை சேர்ட் அணிந்திருப்பதன் காரணமாக அந்த இடம் ஒரு விழாவுக்குரிய சிறப்பைப் பெற்றிருக்கும்.

விருந்து நிறைவுற்றதும் வாழை இலைகளை ஒவ்வொன்றாக எடுப்பதில்லை. மாறாக ஏலவே விரிக்கப்பட்ட பத்திரிகை அச்சிடும் தாளை அப்படியே இலைகளோடு சேர்த்து மடித்து எடுப்பர். அதைப் பார்க்கும் போது மிகவும் விருப்பமாகவும் வியப்பாகவும் இருக்கும். மீளவும் பந்திப்பரிமாற்றத்திற்காக அச்சிடும் தாள் மேசையில் நீளமாக விரிக்கப்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடத்தனையில்...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கம் முற்றிய நிலையில், இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் மோதலில் ஈடுபட்டதுடன் வாள்வெட்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-7,4)

## பலாலி இராஜ...

டுப்பாடுகளுடன், விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை முதல் குறித்த ஆலயத்திற்கு தினமும் சென்று வழிபாடு செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. அதில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி ஆலயச்சூழல் உள்ள பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் சுமார் 35 ஆண்டுகளின் பின் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நித்தியபூஜைகள் மீள ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,4,33)

## ஈஸ்ரர்...

அதிகாரிகள் தங்கள் அரசியல் எஜமானர்களின் தாளத்திற்கு நடனமாடுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கம் உறுதிமொழி அளித்த போதிலும், அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்றும் கர்தினால் கூறினார்.

கொழும்பில் உள்ள கொச்சிக் கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடந்த விழாவில் பேசிய கர்தினால் ரஞ்சித், அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதில் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்,

பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தச் சம்பவம் குறித்த விசாரணை போதுமானதாக இல்லை.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் முதல் தொகுதியில் பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் எந்த அரசியல் தலைவரோ அல்லது கட்சியோ அவற்றை செயற்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. “சரியான கட்டமைப்பு அல்லது வழிமுறை எதுவும் உருவாக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள் மற்றும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளின் மூத்த அதிகாரிகளை விமர்சித்த மல்கம் ரஞ்சித், தாக்குதல்களைத் தடுக்கும் பொறுப்பு இருந்தபோதிலும், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டனர் என்றார்.

அறிக்கையின் கண்டுபிடிப்புகள் தொடர்பாக எந்தவொரு சட்ட அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் எடுக்காத சட்டமா அதிபர் திணைக்களத்தின் குறைபாடுகள் குறித்து கவலை தெரிவித்த அவர்,

தாக்குதல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் எதுவும் செய்யாதது வெட்கக்கேடானது. “தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதை விட அரசியல் சூழ்ச்சியில் அதிக ஆர்வம் காட்டும் சில அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளின் செயல்களை நாங்கள் காண்கிறோம்.

கடந்த தேர்தல் பிரசாரத்தின் போது, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முழுமையான விசாரணைகளை உறுதி செய்வதாகவும், சிறப்பு வழக்கறிஞரை நியமிப்பதாகவும், அதற்காக ஒரு அலுவலகத்தை அமைப்பதாகவும் அரசாங்கம் உறுதியளித்திருந்தது. இருப்பினும், இந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தாக்குதல்களை விசாரிப்பதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை கோடிட்டுக் காட்டும் NPPயிடமிருந்து ஒரு கொள்கை அறிக்கை வழங்கப்பட்ட போதிலும், அரசாங்கம் இது தொடர்பாக எந்த அடிப்படை நடவடிக்கைகளையும் தொடங்கவில்லை என்று மீண்டும் வலியுறுத்திய கர்தினால், “இது எங்களுக்கு மிகவும் கவலையளிக்கும் ஒன்று” என்றும் கூறினார். (ந-7,4)

## பலாலி கிழக்குப்...

அங்கு மக்கள் மீள்குடியேற நடவடிக்கை எடுத்து வருவதாக ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்குத் தினமும் வந்து வழிபட தற்காலிகமாக ஒரு பாதை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாதையூடாக சென்று அம்மனைவழிபடமுடியும். விரைவில் ஆலயத்திற்கு செல்லும் வீதி விடுவிக்கப்படும்.

அதேவேளை பலாலி கிழக்கு பகுதியை உயர் பாதுகாப்பு வலயத்துள் இருந்து விடுவித்து, காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

இராணுவத்தினரும் அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை காட்டியுள்ளனர்.

மக்கள் வெளியேறி இன்றுடன் (நேற்று) சரியாக 35 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தற்போது இப்பிரதேசம் காடுகளாகக் காணப்படுகிறது. விரைவில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு செந்தழிப்பான பிரதேசமாக மாறும் எனத் தெரிவித்தார். (ந-7,4,33)

## தயா கமகேவின்...

நீதிமன்றத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய 104.2 மில்லியன் ரூபாய் தொகையை வசூலிக்கும் நோக்கில் இந்த மூன்று நிறுவனங்களும் பகிரங்கமாக ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

தயா குழுமம் லிமிடெட், தயா அப்பரல் எக்ஸ்போர்ட்டர் (பிரைவேட்) லிமிடெட், ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களே இவ்வாறு ஏலத்தில் விற்கப்படவுள்ளன. (ந-7,4)

## பண்டிதர்...

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8.30 மணியளவில் புலோலியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (ந-7,4)






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை

## மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை



(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அத்தியாவசிய மானவை உள்ளிட்ட மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் வைத்தி யசாலையில் மேற்கொள்ளப்படும் சீரி, எம்.ஆர்.ஐ ஆகிய கதிரியல் பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ள நிலையில் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் கடும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) கொழும்பு தேசிய வைத்தியசாலைத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள பிரதான வைத்தியசாலையாக கொழும்பு தேசிய வைத்தியசாலையுள்ளது. எனினும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் பலவேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. வைத்தியசாலையின் கையிருப்பில் இருக்க வேண்டிய அத்தியாவசிய மருந்துகளான நோய் எதிர்ப்பு மருந்துகள், மயக்க மருந்து, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்க்காக வழங்கப்படும் மருந்துகளுடன், அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்தோடு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சீரி, எம்.ஆர்.ஐ ஆகிய கதிரியல் பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கான கணினி இணைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளது. எனினும் உரிய தரப்பினர் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைக்கு பெருமளவான தொகையைச் செலவிட்டு கதிரியல் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர்.

கதிரியல் பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்படும் நோயாளியின் நோய் தொடர்பில் பரிசோதனை செய்து உரிய காலத்திற்குள் சிகிச்சை அளிப்பது அவசியம். காலதாமதத்தால் உயிராபத்தும் ஏற்படலாம்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக தகுதிவாய்ந்த ஒருவர் நியமிக்கப்படாமையால், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப்பணிகள் சீர்குலைந்துள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள குளிரூட்டிக் கட்டமைப்பு செயலிழந்துள்ளமையால் சிகிச்சை சேவைகளும் மந்தமடைந்துள்ளது.

வைத்தியசாலையின் பிரேத அறையிலும் குளிரூட்டியில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக சடலங்களைப் பாதுகாப்பதிலும் பாரிய நெருக்கடி உருவாகியுள்ளது என்றார். (ந-4,7)


## பணியாளர்கள் தேவை

யாழ். பிரபல சுப்பர்மாக்கட் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. AD சாரதி
2. முகாமையாளர்
3. பணியாளர் (ஆண்/ வண்)
4. கணக்காளர் (கணனி அறிவுடையவர்கள்)

(4560)

077 221 0294


### இஸ்ரேல்...

தாக்குதல் தொடுத்தது.

மின்சாரம் மற்றும் எரிவாயு நிலைகளை குறிவைத்து தாக்கியதாக ஈரான் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் ஒரு இளம்பெண் உட்பட 3 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

இதற்கு பதிலடியாக ஈரான் தலைநகர் தெஹ்ரான் அருகே அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஷஹ்ரன் (Shahran) எண்ணெய் கிடங்கு மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியது.

இதனால் எண்ணெய்க் கிடங்கு பற்றி எரிந்தபோதும் நெருப்பை கட்டுப்படுத்திவிட்டதாக ஈரான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இஸ்ரேல் ஈரான் மோதல், விரைவில் முடிவுக்கு வரும் என்றும், இரு நாடுகளும் சமாதான ஒப்பந்தத்தில் சேரும் என்றும் அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் டிரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியா, பாகிஸ்தான் இடையே தான் ஏற்படுத்திய அமைதிபோலவே இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே ஒப்பந்தம் உருவாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ந-4,7)


## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3204)

076 825 7716 (ஆகாஸ்)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3205)



## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613
(C-3203)



## உடனடி விற்பனைக்கு

புத்தம் புதிய பலட் றக்
( Hand pallet truck - 2.5 தொன் )
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
076 097 3121
(இ)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org